## உள்ளாட்சித் தேர்தலிலும் – இடைத்தேர்தலிலும் பார்த்துக் கொள்ளலாம்! நாங்கள் பின்வாங்கியதாக எங்கும் – யாரும் எதுவும் நினைக்க வேண்டாம்!

# தமிழர்களின் உரிமைக்காக தி.மு.க. என்றும் போராடும்!

## சட்டப்பேரவையில் தென்காசி – டாக்டர் கலை கதிரவன் பேச்சு!

சென்னை, ஆக.30-

**நாங்கள் பின்வாங்கியதாக எங்கும் - யாரும் எதுவும் நினைக்க வேண்டாம். உள்ளாட்சித் தேர்தலிலும் - இடைத்தேர்தலிலும் பார்த்துக் கொள்ளலாம் என்று சட்டப்பேரவையில் தென்காசி தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் பேசுகையில் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் டாக்டர் கலை கதிரவன் பேசியதாவது:-**

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், அவர் காட்டிய வழியில் உழைக்க கற்று தந்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் வணங்கி அவர்கள் இருந்த, அவர்கள் அமர்ந்திருந்த இப்பேரவையில் எனது முதல் உரையைத் தொடங்குகின்றேன்.

இன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறை, நீர்வளத் துறை போன்ற துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த எங்கள் தலைவர், முன்னாள் முதல்வர், முதலமைச்சர் என்றாலே அனைவருக்கும் நினைவிற்கு வருவது, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், எங்களுக்கெல்லாம் நாகரிக அரசியலைக் கற்றுத் தந்தவர். எங்களுக்கு மட்டுமில்லாமல் தமிழ்நாட்டிற்கே நாகரிக அரசியலைக் கற்றுத் தந்தவர், மக்களைப் பற்றி எந்நாளும் சிந்திக்கும் ஒரு தலைவர், அன்புக்கும் பண்பிற்கும் அடையாளமாகத் திகழும், எங்கள் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூற்றாண்டு கண்ட இந்த இயக்கத்தின் கொள்கைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல இந்த இயக்கமே எங்களுக்குத் தந்த இளம் தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி, என் உரையைத் துவங்குகின்றேன்.

**ஒரு தொண்டனாக பெருமைப்படுகிறேன்!**

என்னை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிமுகம் செய்து, எனக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த நேரத்தில், பல ஆண்டுகளாக என்னுடன் நிழலாகப் பயணிக்கும் அன்பகம் கலை அவர்களின் மகன் கலை கதிரவன் என்று ஒரு அங்கீகாரத்தை எனக்குக் கொடுத்திருக்கிறார். ஒரு தொண்டனாக, அந்தத் தருணத்தில் மிகவும் பெருமைவாய்ந்து இருந்தேன்.

ஏனென்றால், ஒரு தொண்டனாக, ரசிகனாக இல்லை. ஒரு தொண்டனாக பெருமைகொள்கிறேன். ஒரு தொண்டனுக்கு முக்கியம் என்னவென்றால், தொண்டனுக்கு ஒன்று என்றால் தலைவன் வந்து நிற்க வேண்டும். அதுமாதிரி, தொண்டனுக்கு ஒன்று என்றால் முதலில் வந்து நிற்பது எங்கள் தலைவர் அவர்கள்தான். அவர் வழியில் பயணிப்பதற்குப் பெருமை கொள்கின்றேன்.

இன்று நான் ஒரு சிறிய தொண்டன். கழகத்தின் இளம் தலைவர் அவர்களுடன் பயணிப்பதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளராக நிற்பதற்கு வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர் அவர்களுக்கும், இளம் தலைவர் அவர்களுக்கும், எனக்கு ஆதரவு அளித்த கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் மதிப்பிற்குரிய அக்கா கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களுக்கும் மற்றும் எனக்கு ஆதரவு அளித்த கழகத்தின் முன்னோடிகள் அண்ணன் கே.என். நேரு அவர்களுக்கும், எ.வ.வேலு அவர்களுக்கும், அனிதா இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் அனைவருக்கும், கழகத்தில் என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பார்த்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்காசி தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக உழைத்த அனைத்துக் கழகத்தினருக்கும், மற்றும் கழகத்தின் இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை அவர்களுக்கும், அண்ணா அறிவாலயம் பொன் தனபால் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும், தோழமைக் கட்சிகள் தோழர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தால்தான் நம் மாவட்டம் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையில் தென்காசி மாவட்டம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக நின்று உதயசூரியன் சின்னத்தில் எனக்கு வாக்களித்த, வாக்குகளை மட்டுமல்ல அன்பையும், நம்பிக்கையையும், பொறுப்பையும் வழங்கிய, அவர்கள் இல்லத்திலிருந்த ஒருவனை, அவர்கள் உள்ளத்திலிருந்த ஒருவனை இன்று இந்தப் பேரவைக்கு அனுப்பிய என் இதயத் துடிப்பான தென்காசி தொகுதி மக்களுக்கு என் வாழ்நாள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுற்றுலாத்துறை லாபத்தில் இயங்கியது!**

சுற்றுலா என்பது, வெறும் பயணம் மட்டுமல்ல, நாம் ஒரு இடத்திற்குச் சென்று அங்கிருக்கின்ற மக்களைச் சந்திப்பது, அந்த மக்களினுடைய கலாச்சாரம் என்ன என்பதைப் பார்ப்பது, அந்த மக்களினுடைய வரலாறு என்ன என்பதைத் தெரிந்துகொள்வது. அத்தகையச் சுற்றுலாவிற்கு பயணம்தான் பிரதானம் என்று அறிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற துறையைத் தொடங்கினார். சுற்றுலாத் துறைக்கு தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதெல்லாம் பல சாதனைகளை செய்திருக்கிறது. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிட நான் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக, நஷ்டத்தில் இயங்கி வந்த சுற்றுலாத் துறையை இலாபமாக மாற்றிய பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு. 2021-2022- ஆம் ஆண்டில் 84.31 கோடி ரூபாயாக இருந்த TTDC-ன் வருவாய் 237.8 கோடி ரூபாயாக கணிசமாக உயர்ந்துள்ளது. அதேபோல 11.22 கோடி ரூபாயாக இருந்த இழப்பீடு இப்பொழுது தொடர்ந்து இலாபமாக முன்னேறியுள்ளது.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை மேம்பட திராவிட மாடல் ஆட்சி நிறைய சாதனைகளை செய்துள்ளது. அதில் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். அய்யன் திருவள்ளுவரின் பெருமையை உலகளவில் பிரபலப்படுத்தவும், கன்னியாகுமரிக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு 11.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3D laser தொழில்நுட்பம் கொண்ட ஒளியூட்டுதல் நிறுவப்பட்டு, 30--12--2024 அன்று அன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையைப் பராமரிக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்தும்விதமாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கொல்லிமலைக்கு 2.23 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் தங்குமிடம் மற்றும் திறந்தவெளி முகாம்கள் அமைக்கப்பட்டு, 26-11-2024 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, ஜவ்வாது மலையில் 2.91 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் முகாம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, ஏற்காடு, ஏலகிரியில் நில சீரமைப்பு, காட்சிமுனை, உள்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்தும் பணி சுமார் 12.6 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலாவிற்கு புதிய தலமாக அணைகள், ஏரிகள், அருவிகள் மற்றும் கடலோரப் பகுதி ஆகிய அனைத்திற்கும் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு உதாரணமாக, திருவள்ளூர் மாவட்டம் பூண்டி அணைக்கட்டு, திருப்பூர் மாவட்டம் ஆண்டிப்பாளையம், தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, அத்தியூர் ஏரி, கீழப்பாவூர் ஏரி என மொத்தம் சுமார் 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அருவிகள், கடற்கரைகள் மற்றும் இயற்கை சுற்றுலாத்தலங்கள் மேம்பாட்டிற்கு தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் அருவிக்கு, ரூ.17.58 கோடி ரூபாய், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரைக்கு ரூ.7.15 கோடி ரூபாய், தென்காசி மாவட்டம் குற்றாலத்திற்கு ரூ.11.35 கோடி, கோயம்புத்தூர் வால்பாறை Hornbill viewpoint பகுதிக்கு காட்சிமுனை அமைக்க 2.83 கோடி ரூபாய் என்று சுற்றுலாவுக்கு ஏகப்பட்ட நலத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது திராவிட மாடல் ஆட்சி.

**சுற்றுலா என்பது வரலாற்றைச் சார்ந்தது!**

சுற்றுலா என்பது பொருளாதாரத்தை மட்டும் சார்ந்தது அல்ல என்று முன்பே கூறியதுபோல, தமிழர் வரலாறு மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு மயிலாடுதுறை மாவட்டத்தின் பாரம்பரிய நகரமான பூம்புகாருக்கு ரூ.23.6 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணி நடைபெற்றது.



UNESCO உலக பாரம்பரிய சின்னமான கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ரூ.5 கோடி செலவில் நுழைவு வளாகம், வாகனம் நிறுத்துமிடம், வழிகாட்டி பலகைகள், மின் வாகனம் உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய பழுங்கால சமண ஸ்தலமான சித்தன்னவாசல் இருக்கிறது. அதற்கு ரூ.3.9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல நமது பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டிற்கு மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் ரூ.62.97 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டு, 24--1--2024 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டிற்கு உலகத்தரமான உட்கட்டமைப்பையும், உருவாக்கி இருப்பதில் தமிழர் பண்பாட்டின் பெருமையை நிலைநாட்டும் முக்கிய சாதனையாகும் இது. அதுமட்டுமின்றி தமிழ்நாட்டை சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் முன்னணி மாநிலமாக நிலைநிறுத்தும் வகையில் உலகின் முக்கிய சுற்றுலா சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் தொடர்ந்து பங்கேற்றுள்ளது. தமிழ்நாட்டிற்குள்ளே சர்வதேச காற்றாடி விழா, இந்திய நாட்டிய விழா, பலூன் திருவிழா, நீர் விளையாட்டு விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன.

மருத்துவச் சுற்றுலாவிலும் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக கொண்டு சென்றது திராவிட மாடல் ஆட்சி. தமிழ்நாடு மருத்துவ மதிப்பு பயண உச்சி மாநாடு 2023-ல் முதன்முறையாக நடத்தப்பட்டது. அதேபோல், ஆடி அம்மன் சிறப்பு சுற்றுலா, விஷ்ணு கோயில் விழா, முருகன் கோயில்கள் சுற்றுலா, திருச்செந்தூர், இராமேஸ்வரம் 3 நாட்கள் சுற்றுலா தொகுப்பு என ஆன்மீகம் மற்றும் பண்பாட்டுச் சுற்றுலா தொகுப்புகளை முதன்முறையாக அறிமுகப்படுத்தியது திராவிட மாடல் ஆட்சி.

மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி சுற்றுலா எடுத்துச் சென்றது திராவிட மாடல் ஆட்சி. திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர்களின் நலன், கலைஞர்களை காக்கும் அரசாக திகழ்ந்தது.

நம் தமிழ்நாட்டில் மொத்தம் 99 பாரம்பரிய கலை வடிவங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் நாட்டுப்புறக் கலை நல வாரியத்தில் மட்டும் 57,308 கலைஞர்கள் பதிவு செய்துள்ளனர். இந்த பட்ஜெட்டில் நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்வாதார பாதுகாப்புத் திட்டம் என்று ஒரு திட்டத்தைத் தொடங்கி இருக்கிறீர்கள். அதில் 100 நாட்கள் 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், வாழ்வாதார திட்டம் என்றால், அனைவருக்குமான திட்டமாக இருக்க வேண்டும், அதில் 200 குழுக்களை எதனடிப்படையில் தேர்ந்தெடுப்பீர்கள்? மற்றும் சுற்றுலாத் துறையில் மாமல்லபுரத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக மேம்படுத்த திட்டம் உள்ளதாகவும் அதற்கு ஒன்றிய அரசிடம் 200 கோடி ரூபாய் மானியம் கேட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். ஒன்றிய அரசு மானியம் தரவில்லை என்றால், மாநில அரசு அந்த 200 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குமா? அப்படி நிதி ஒதுக்குவது என்றால், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உள்ள குற்றாலம் உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்கப்படுமா?

**இரட்டைக்குளம் கால்வாய்த் திட்டம்!**

என் தென்காசி சட்டமன்றத் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருக்கிறது. மலைகளிலிருந்து அருவி, ஆறுகள் என எல்லாமே வந்தாலும் தென்காசி தொகுதியில் ஒரு பகுதி வறட்சியான பகுதிதான். வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கிறது. தென்காசி தொகுதி மக்களுக்கு நீண்டநாள் கோரிக்கையான இரட்டைக்குளம் கால்வாய்த் திட்டத்தை இந்த அரசு இந்த நடப்பாண்டிலேயே கொண்டுவருமா? அதற்கான முன்னெடுப்புகளை எடுக்குமா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இரட்டைக்குளம் கால்வாய்த் திட்டம் வந்துவிட்டால், கிட்டத்தட்ட 15 கிராமங்கள் 7,500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும். இந்தத் திட்டத்திற்கு நடப்பாண்டிலேயே நிதி ஒதுக்க வேண்டுமென்று நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜம்புநதி, ராம நதி கால்வாய்த் திட்டம், கடந்த திராவிட மாடல் ஆட்சியில் 75 சதவிகித பணிகள் முடிந்துவிட்டது. மீதம் ஒரு 20, 25 சதவிகித பணிகள் மட்டும்தான் இருக்கிறது. அதற்கான நிதியையும் இந்த அரசு நடப்பாண்டிலேயே நிதி ஒதுக்கி, அந்தப் பணிகளையும் முடிப்பதற்கு வழிவகுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சுரண்டை நகராட்சியில் செண்பகக் கால்வாய் இருக்கிறது. செண்பகக் கால்வாயில் என்ன problem இருக்கிறது என்று பார்த்தீர்களென்றால், ஊரில் இருக்கிற எல்லா கழிவுநீர்களும் அந்த செண்பகக் கால்வாயில் கலப்பதனால், சரியான ஓடை இல்லை, செண்பகக் கால்வாய் சீரமைக்கப்பட வேண்டும், தூர்வாரப்பட வேண்டும். அதேபோல, சுரண்டை நகரத்திற்கு ஒரு STP அமைத்துத் தர வேண்டும். செண்பகவள்ளி தடுப்பணை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தென்காசி நகரத்திற்கு ஒரு STP அமைத்துத் தர வேண்டும்.

தொகுதிக்கு அதிக அளவிலான கோரிக்கைகள் இருக்கின்றன. ஊத்துமலையைத் தனி யூனியனாகக் கொண்டுவர வேண்டும். அனைத்துக் கால்வாய்களும் தூர்வாரப்பட வேண்டும். தென்காசி மாவட்டம் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டம். அங்கு ஒரு அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும்; Agriculture College வேண்டும்; Law College வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் இருக்கின்றன.

தென்காசியின் தொகுதி கோரிக்கைகளை தங்களிடம் அளிக்கிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தலைவர் அவர்கள் சொன்ன ஒரே ஒரு வாக்கியம் மட்டும் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். சில பேர் தி.மு.க.-வை பிடிக்காது என்று சொல்வார்கள். அதற்கான பொருள், ஒடுக்கப்பட்ட மக்கள் படிப்பது பிடிக்காது; இந்த மாநிலத்தில் குழந்தைகள் படித்துப் பெரியநபர்களாகி, I.A.S., I.P.S., doctors ஆக வருவது பிடிக்காது; சமூக நீதி பிடிக்காது; சமத்துவம் பிடிக்காது; கோயில்களின் உள்ளே அனைவரும் செல்வது பிடிக்காது; அனைத்து சாதியினரும் அர்ச்சகராவது பிடிக்காது; ஒற்றுமை பிடிக்காது; தமிழ் மொழி பிடிக்காது; தமிழ்நாட்டின் வளர்ச்சி பிடிக்காது.

நாங்கள் போராடியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக மட்டும் இல்லை; தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, தமிழக மக்களின் வளர்ச்சிக்காக; நாங்கள் கொண்ட கொள்கைப் போரில் சற்றே பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம்; ஆனால் பின்வாங்கவில்லை. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. "Losing a battle doesn't mean that you lost a war" என்று. தமிழர்களின் உரிமைக்காக திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் போராடும். நாங்கள் பின்வாங்கியதாக எங்கும், யாரும், ஏதும் நினைக்க வேண்டாம். உள்ளாட்சித் தேர்தலிலும் பார்த்துக்கொள்ளலாம்; அதேபோன்று இடைத் தேர்தல்களிலும் பார்த்துக்கொள்ளலாம். பேரவைத் தலைவர் அவர்களுக்கு, நன்றி.

இவ்வாறு டாக்டர் கலை கதிரவன் பேசினார்.

**பள்ளிக் கல்வித் துறை கோரிக்கைகள்**

1. தென்காசி ஊராட்சி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, அய்யாபுரம் கிராமம், ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

2. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையானூர் அரசு நூலகக் கட்டடத்தை அகற்றி, புதிய நூலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

3. தென்காசி ஊராட்சி ஒன்றியம், அழகப்பபுரம், தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

4. தென்காசி ஊராட்சி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, வேதம்புதூர், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

5. சிவநாடானூர் பஞ்சாயத்திற்கு பாத்தியப்பட்ட 17 சென்ட் இடத்தில் புதிதாக தொடக்கப்பள்ளிக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

6. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திரராமபுரம், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும்.

7. வடக்கு காவலாக்குறிச்சி நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும்.

8. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சி, முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியை அரசு உதவி பெரும் பள்ளியாக மாற்ற வேண்டும்.

9. தென்காசி, ஆசாத் நகர், அரசு கிளை நூலகம் அமைக்க வேண்டும்.

10. பலபத்திரராமபுரம் கிராமம், புதிய அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

**கால்நடைப் பராமரிப்புத் துறை**

1. தென்காசி ஊராட்சி ஒன்றியம், கீழப்புலியூர் பகுதி, கால்நடைக் கிளை மருத்துவமனைக்கு புதியக் கட்டடம் கட்ட வேண்டும்.

2. பாவூர்சத்திரம் மற்றும் திப்பணம்பட்டி, கால்நடை மருத்துவமனை மற்றும் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

3. வாடியூரில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையத்திற்கென சொந்தமான கட்டடம் கட்டித் தர வேண்டும்.

4. தென்காசி, கால்நடை மருந்தகத்தை கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

5. தென்காசியில் கால்நடை உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் அமைத்துத் தர வேண்டும்.

6. வடக்கு காவலாக்குறிச்சி, பகுதி நேர கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

7. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குறும்பலாப்பேரி, கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

1. சுரண்டை, செண்பக கால்வாய், சாக்கடைக் கழிவுநீர் கலப்பதைத் தடுத்துத் தூர்வாரி, சிமெண்ட் தளம் அமைத்து தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

2. தென்காசி, வீட்டுவசதிவாரியக் குடியிருப்புப் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர வேண்டும்.

3. அருள்மிகு காசிவிஸ்வநாதன் திருக்கோயிலுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்துத் தர வேண்டும்.

4. தென்காசி நகரம், வார்டு எண் 1, சுபஸ்ரீ நகர், மண்சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

5. தென்காசி நகரம், வார்டு எண் 2, வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதி, மண்சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

6. தென்காசி நகரம், வார்டு எண் 33, ஆசாத் நகர், மண்சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

7. சுரண்டை நகராட்சி, செங்கோட்டை-சுரண்டை இணைப்புச் சாலையை சீரமைத்துத் தர வேண்டும்.

8. தென்காசி, 13-வது வார்டு, தைக்கா தெரு,புதிய சுகாதார வளாகக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

9. சுரண்டை நகராட்சி, தாமிரபரணி தனி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தி வேண்டும்.

10. தென்காசி, 19-வது வார்டு, கொடிமரம் பகுதி, நகராட்சியின் சொந்த இடத்தில் புதிய ரேசன் கடை கட்ட வேண்டும்.

11. சுரண்டை நகராட்சி, கீழச்சுரண்டை, லோகமாதா திருமண மண்டபம் வடபுறம் வாடியீர் ரோடு முதல் மேற்கே ஓடை வரை வாறுகால் வசதியுடன் சிமென்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

12. தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் கோயில், அரசு மல்டி லெவல் கார் பார்க்கிங் வசதி செய்திட வேண்டும்.

13. தென்காசி, சிற்றாறு படித்துறைகளை சீரமைத்திட வேண்டும்.

14. தென்காசி, 9-வது வார்டு, பாறையடி 2 ஆம் தெரு, உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட வேண்டும்.

15. தென்காசி, 13-வது வார்டு, தைக்கா தெரு, உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட வேண்டும்.

16. தென்காசி, கீழப்புலியூர் இரயில் நிலைய கேட் அருகில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட வேண்டும்.

17. சுரண்டை நகரம், ஜமீன் சுரண்டை, 24-வது வார்டு, TDTA ராஜம் பள்ளி அருகில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட வேண்டும்.

18. சுரண்டை நகரம், ஜமீன் சுரண்டை, 24-வது வார்டு, TDTA ராஜம் பள்ளி அருகில் பயணியர் நிழற்குடை அமைக்க வேண்டும்.

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

1. சுரண்டை, 100 படுக்கை வசதி கொண்ட 24 மணி நேரமும் செயல்படும் அரசு மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

2. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கருவந்தா, ஆரம்ப துணை சுகாதார நிலைய பழைய கட்டடத்தை அகற்றிவிட்டுப் புதிய கட்டடம் கட்ட வேண்டும்.

3. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஊத்துமலை, ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட வேண்டும்.

4. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், முத்தம்மாள்புரம், புதிய அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

5. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், வீரகேரளம்புதூர் வட்டம். இடையார்தவணை ஊராட்சி, இ.மீனாட்சிபுரம், பழுதடைந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அகற்றி, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

6. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர செயல்படும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட வேண்டும்.

7. தென்காசி அரசு மருத்துவக் கல்லூரி துவங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையில் உடற்கூறு ஆய்வுக் கூடத்தை (Post-mortem Room) நவீன குளிரூட்டப்பட்ட ஆய்வுக் கூடமாக அமைத்துத் தர வேண்டும்.

9. தென்காசி ஊராட்சி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட வேண்டும்.

10. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இராஜகோபாலப்பேரி ஊராட்சி, அதிசயபுரம் கிராமம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

**உள் துறை**

1. தென்காசி, சுரண்டை நகராட்சி, புதிய துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டும்.

2. சுரண்டை, போக்குவரத்துக் காவல் பிரிவை உருவாக்கித் தர வேண்டும்.

3. ஆலங்குளம் உட்கோட்டம், தனி போக்குவரத்துக் காவல் பிரிவு உருவாக்கி, அனைத்துக் காவல் நிலைய எல்லைகளிலும் போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும்.

4. தென்காசி, கிராமத் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு இரவு 12 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு காவல் துறை அனுமதி வழங்க வேண்டும்.

உயர்கல்வித் துறை

- ஊத்துமலை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஐடிஐ, பாலிடெக்னிக் அமைக்க வேண்டும்.

கனிம வளத் துறை

- ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கலங்கல், கல்குவாரிகளில் அதிகாரிகள் உரிய ஆய்வு மேற்கொண்டு வெடிபொருள் உபயோகிப்பதை நிறுத்தி, பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்ய வேண்டும்.

**சட்டத் துறை**

தென்காசி, வீரகேளம்புதூர், தாலுகா நீதிமன்றம் அமைத்திட வேண்டும்.

வனத் துறை

1. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வீரகேரளம்புதூர் தாலுகா, ருக்குமணியம்மாள்புரத்திலிருந்து ஆஞ்சநேயர் கோயில், தேவர்குளம், திருநெல்வேலி மற்றும் சங்கரன்கோவிலுக்குக் காடுகளின் வழியே பொதுமக்கள் சென்றுவர இருக்கின்ற தடையை நிரந்தரமாக நீக்க வேண்டும்.

2. ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சி, ருக்குமணியம்மாள்புரம், சர்வே எண் 87, முத்தம்மாள்புரம் இடத்தை காப்புக்காடாக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். வேறு பகுதிகளிலிருந்து வன விலங்குகளை மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகே உள்ள காட்டிற்குள் கொண்டுவிடுவதை நிறுத்த வேண்டும். வனவிலங்குகளுக்கு குடிநீர் வசதி செய்துதர வேண்டும்.

**கூட்டுறவு மற்றும் பால்வளத் துறை**

- தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, கால்நடை செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி பயிற்சி பெற்ற மாணவர்களை அந்தந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் கிராம நிலை தற்காலிக ஊழியர்களாக பணி வழங்கிட வேண்டும்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்